[திரு. ப. உ. சண்முகம்]

பற்றி காலதாமதமின்றி ஒலிபரப்ப ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இந்த நேரத்தை சரிக்கட்டவே காலை மாலை ஐந்து நிமிடங்கள் விதம் மொத்தம் 10 நிமிடங்கள் தமிழ்ச் செய்திகள் ஒலிபரப்பப் படும் நேரத்தில் குறைத்திருக்கிறார்கள். பிற எல்லா மொழி ஒலிபரப்பிலும் நாடு முழுவதும் இதே போன்ற மாற்றம் செய்யப் பட்டிருப்பதாகத் தெரிகிறது.

தமிழ்நாடு சட்டப் பேரவையில் இந்த அறிவிப்பை வைக் கிறேன்.

திரு. பெ. மலைச்சாமி: தலைவரவர்களே, தற்போது இந்திய நாட்டிற்கு பாகிஸ்தானல் கொடுமையான ஒரு செயல் நடந்து கொண்டிருக்கும் நேரத்தில் வெளிநாட்டிலுள்ள தமிழக மக்கள் இந்தியச் செய்தியை முழுமையாகக் கேட்டால்தான் இந்தியா விற்கு ஆதரவாக வெளிநாடுகளின் ஆதரவைத் திரட்ட முடியும். எனவே மீண்டும் பழைய நேரங்களில் ஒலிபரப்புவதற்கு ஏற்ற வகையில் மத்திய சர்க்காரை வற்புறுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: தலைவரவர்களே, இப் பொழுது ஒலிபரப்பப்படும் நேரங்களில் 10 நிமிடங்கள் குறைந் திருந்தாலும் சொல்ல வேண்டிய செய்திகளை முழுதும் சொல்லி விடுகிறார்கள். இடையிடையே முக்கிய செய்திகளை நாட்டு மக்களுக்கு ஆங்கிலத்திலும், இந்தியிலும் சொல்கிறார்கள். இதனால் எந்தச் செய்தியும் குறைக்கப்படவில்லை. இப்பொழுது அவசர நிலை இருப்பதால் இது சம்பந்தமாக மத்திய அரசுக்கு எழுத வேண்டிய அவசியமில்லை என்று கருதுகிறது.

(3) அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆட்சிக் குழுவிற்குத் தேர்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஒரு அறிவிப்பு.

அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தின் பேரவை (Senate) 6—12—1971 முதல் திருத்தி அமைக்கப்பட வேண்டியிருப்பதால், அப்பேரவைக்குத் தமிழ் நாடு சட்டப் பேரவை உறுப்பினர்கள் தங்களிலிருந்து மூவரைத் தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யுமாறு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் கோரியுள்ளது. பல்கலைக் கழகத் தின் சட்டப்படி, ஒற்றைமாற்று வாக்கு மூலம் இத்தேர்வு நடை பெறும்.

எனவே, வேட்பாளர்கள் நியமனத் தாள்களை 8—12—1971 புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்குள் பேரவைச் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். நியமனத்தாள்கள் வேண்டுவோர் செய லாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

[பேரவைத் தலைவர்]

நியமனத்தாள்கள் 9—12—1971 வியாழக்கிழமை காலை 11 மணிக்குப் பரிசிலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். விலகிக் கொள்ள விரும்புகிற வேட்பாளர்கள் 9—12—1971 வியாழக் கிழமை பிற்பகல் 3 மணிக்குள் விலகிக் கொள்ளலாம்.

நியமனம் செய்யப்பட்ட வேட்பாளர்களின் எண்ணிக்கை வெற்றிடங்களின் எண்ணிக்கைக்கு, அதாவது, மூன்றுக்கு மேற் படுமாயின் 10—12—1971 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கும் பிற்பகல் 1 மணிக்கும் இடையே சென்னை கோட்டையில் இருக்கும் உறுப்பினர் ஓய்வு அறையில் வாக்கெடுப்பு நடைபெறும்.

(7) அரசினர் சட்ட முன்வடிவு

தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவர்கள் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்டமுன் வடிவு எண் 25/1971). மீதான கூட்டாய்வுக் குழுவின் அறிக்கையை அளித்தல்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: தலைவரவர்களே, தமிழ்நாடு 1971-ம் ஆண்டு ஹோமியோபதி மருத்துவர்கள் சட்ட முன்வடிவு (சட்டப் பேரவை சட்ட முன்வடிவு எண் 25/1971) மீதான கூட்டாய்வுக் குழுவின் அறிக்கையைத்* தங்கள் அனுமதியோடு வைக்கிறேன்.

..

(8) தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1971-72-ம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீது விவாதம்

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் 1971-72-ம் ஆண்டின் நிதிநிலை அறிக்கையும், 1970-71-ம் ஆண்டின் துணை நிதி நிலை அறிக்கையும் இம் மன்றத்தின்முன் வைக்கப்பட்டுள்ளன. இவற்றை இம் மன்றம் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டு மென நான் வேண்டுகின்றேன்.

1948-ம் ஆண்டு மின்சார (வழங்கல்) சட்டத்தின் 61-வது பிரி வின்படி, தமிழ்நாடு மின்சார ஆலோசனைக் குழுவின் ஒப்புதலைப் பெற்றபின், தமிழ்நாடு மின்சார வாரியம் கடந்த பிப்ரவரித் திங்களில், இந்த நிதிநிலை அறிக்கைகளை அரசுக்கு அனுப்பியது. ஆண்டு நிதிநிலை அறிக்கையும் துணை நிதிநிலை அறிக்கையும் சட்ட மன்றத்தினுல் விவாதிக்கப்படலாம் என்றுலும், இவை வாக் கெடுப்புக்கு உட்பட்டவையல்ல. எனினும், இவ்வறிக்கைகள் குறித்து சட்ட மன்றத்தில் கூறப்படும் கருத்துக்களை மின்சார வாரியம் ஆழ்ந்து சிந்தித்து ஆவன செய்யும். சென்ற ஆண்டு மின்சார வாரியத்தின் நிதிநிலை அறிக்கைகளின்பேரில் நடை பெற்ற விவாதத்தில் கூறப்பட்ட கருத்துக்களை ஒட்டி மின்சார

---

* 4—12—1971-ம் தேதிய தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளி யிடப்பட்டுள்ளது.